**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 165/2008**

Deposition of **DW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 04.11.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : கமலவேணி Husband Name : குஞ்சுமணி

துவக்க நேரம்: 12.56 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. இவ்வழக்கின் 1-ம் பிரதிவாதியான எனது தந்தை இறந்த பின்னிட்டு அவரது வாரிசு என்ற அடிப்படையில் நான் இவ்வழக்கில் 9-ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். 8-ம் பிரதிவாதி எனது தாயார் என்றால் சரிதான். வழக்கில் வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதற்காக வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி அவர் கிரையம் பெற்ற பத்திரத்தில் அதிகமான அதே அளவுகள் குறிப்பிட்டு எழுதியுள்ளதால் அவரது நிலத்தை அளந்து, நான்கு எல்லைகளையும் நிர்ணயம் செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. வா.த.சா.ஆ.1-ஆவணத்தில் அடியளவுகள் அதிகமாக குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ள விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் அவர்களது குடும்பத்திற்குள் பாகம் செய்தகொண்டபோது கடந்த 1992-ம் ஆண்டே வாதி என்னிடம் கூறினார். நான் சொல்வது தவறு என்றாலும் வா.த.சா.ஆ.1-ஆவணத்தின் பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 ஆவணத்தில் தவறான அளவுகள் குறிப்பிடப்பட்டதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தை அளவீடு செய்தபோது சரியான அளவுகள் காட்டப்பட்டு எங்கள் இருதரப்பும் அதற்கு ஒப்புக்கொண்டோம்.

3. தாவா சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் வந்தபோது எத்தனை முறை அளவீடு செய்யவிடாமல் எங்கள் தரப்பில் தடுத்தோம் என்றால் ஒரு முறை தடுத்தோம், அத்துக்கள் இல்லாத காரணத்தால் அளவீடு செய்ய வேண்டாம் என கூறினோம். நான் சொல்வது தவறு என்றாலும் இரண்டு முறை நீதிமன்ற ஆணையர் தாவா நிலத்தை அளவீடு செய்ய வந்தபோது எங்கள் தரப்பில் தடுத்தோம் என்றால் எனது தந்தை உயிருடன் இருந்தபோது அவர் தடுத்தார்.

4. தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர்மூலம் எத்தனை திசைகளை அளவீடு செய்ய வாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் நான்கு திசைகளிலும் அளவீடு செய்ய தாக்கல் செய்யப்பட்டது. நான் சொல்வது தவறு என்றாலும் வாதி தரப்பில் 3 திசைகள் மட்டுமே மனு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையின்படி தீர்ப்பிட வேண்டும் என நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள நிலையில் ஆணையர் அறிக்கையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தபோது பழைய புலவரைப்படத்தின் அளவுகளின்படி அளவீடு செய்ய சம்மதமா என்று எங்களிடம் கேட்டார், நாங்கள் சரி என்று தன் சம்மதத்தின்பேரில் அவ்வாறு அளவீடு செய்யப்பட்டது.

5. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு வாதி தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில்

வாதி எங்களை இடையூறு செய்யவதாக கூறியுள்ள நிலையில் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் நடவடிக்கைகள் எடுத்தோம், வீரகனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனு கொடுத்து அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

6. நான் கூறுவதுபோல் வாதி எந்த இடையூறும் செய்யவில்லை என்றாலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருந்தால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல. வாதி நிறைய தொந்தரவுகள் கொடுத்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி தாவா சொத்தை உரிமையில்லாத நபரிடமிருந்து கிரையம் பெற்றார் என்று கூறியுள்ள நிலையில் அந்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் அவ்வாறு நான் கூறவில்லை.

7. வாதி கிரையம் வாங்கிய அமலுக்கு வராத பத்திரம் என்று கூறியுள்ள நிலையில் அது எப்படி எனக்கு தெரியும் என்றால் அவ்வாறு நான் கூறவில்லை. மேற்படி இவ்வழக்கின் விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் நான் வழக்கிற்கு சம்மதம் இல்லாமல் மாற்றி மாற்றி பதில் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி அனுபவம் செய்யக்கூடாது என்பதற்காக நீதிமன்ற ஆணையரை அளவீடு செய்தபோது இரண்டு முறை தடுத்தோம் என்றால் சரியல்ல, நாங்கள் இருக்கும் வீட்டை நான்கு தலைமுறைகளாக அனுபவம் செய்து வருகிறோம்.

8. தாவா சொத்தை வாதி அனுபவம் செய்துவ வருவதை இடையூறு செய்யும் என்ற எண்ணத்தில் நான் தற்பொழுது முன்னுக்குப்பின் முரணாக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்தபோது எங்கள் இருதரப்பிலும் ஒப்புக்கொண்டோம். நான் தவறான சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகளாகிய நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பு மறுவிசாரணை இல்லை.

முடிவு நேரம்: 01.29 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.165/2008, Dt.04.11.2025.